29.01.2024

STC.637/2018

PW-1, சமுத்திரபாண்டி

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி.**

திருமங்கலம் டாக்சி ஸ்டாண்ட் ஓட்டுனர் சங்கத்தில் ஓட்டுனராக இருப்பதற்கான உறுப்பினர் அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அடையாள அட்டை என்னிடம் உள்ளது. நான் சொந்தமாக வாகனம் வைத்து ஓட்டி வந்தேன். நான் சொந்தமாக வாகனம் வைத்து ஓட்டியதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் திருமங்கலம் டாக்சி ஸ்டாண்டில் வாகனம் வைத்து ஓட்டி வரவில்லை என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சிய ம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அவருடைய வாகனத்தை நான் புகாரில் சொல்லியுள்ள காலகட்டத்தில் எப்சிக்கு கொண்டு செல்லமாட்டார் என்றும் அவர் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தில் தான் எப்சிக்கு கொண்டு செல்வார் என்றால் சரியல்ல. எப்சி சான்றிதழ் வாங்குவதற்கு குறைந்த பட்சம் 10,000 தான் செலவாகும் என்று வழக்கில் குறிப்பிட்டுள்ள அதிகப்படியான தொகை தேவைபடாது என்றும் எதிரியிடம் பணம் பறிப்பதற்கு வேண்டி பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது உறவினர் குமார் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி என்னுடைய உறவினரான குமார் என்பவரிடம் தான் ரூ.20,000/- கடன் பெற்றார் என்றும் அதற்கு தான் குமார் என்பவரிடம் பூர்த்தி செய்யப்படாத வழக்கு காசோலை கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. குமார் என்பவர் என்னுடைய உறவினர் தான் என்றாலும் அதனை வழக்கிற்காக மறைக்கிறேன் என்றும் அவர் உறவினர் இல்லை என்று அவரிடம் பெற்ற கடன் தொகையை இரண்டு தவணைகளாக எதிரி செலுத்தி முடித்துவிட்டார் என்றும் இதற்கிடையில் மேற்படி குமார் என்பவர் காலமாகிவிட்டதால் மேற்படி அவரிடமிருந்து வழக்கு காசோலையை எதிரி திரும்ப வாங்காத காரணத்தால் அதனை புகார்தாரர் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை எதிரி மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த விபரமும் என்னுடைய உறவினர் குமார் இறந்த விபரமும் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு 29.06.2018 ம் தேதி மூலம் தான் மேற்படி விபரத்தை எதிரி தெரிந்துகொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களின் அடிப்படையில் வழக்கு காசோலை நான் குறிப்பிட்டுள்ள கடன் தொகைக்கு ஆதரவாக கொடுக்கப்படவில்லை என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரி வந்து குமாருக்கு கொடுத்த காசோலையை தவறுதலாக எதிரி மீது தாக்கல் செய்ததால் வழக்கு கடன் தொகையானது சட்டப்படி வசூல் செய்ய முடியாத கடன் தொகை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்தவித

சம்பந்தம் இல்லை என்றும் எந்தவித நட்பும் எங்களுக்குள் இருந்ததே இல்லை என்றும் மேலும் எங்களுக்குள் எந்தவி பண பரிமாற்றம் நடைபெறவில்லை என்றும் எதிரி எந்த காலத்திலும் கடன் தொகை எதுவும் வாங்கவில்லை என்றும் வழக்கு காசோலை எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை என்றும் அதனால் இந்த புகாரை தாக்கல் செய்யும் உரிமை எனக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்றும் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.